**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous CC.No. 38 of 2019
Priliminary Register
Sessions

Prosectuion PW 8
Depostitions of Prosecution witness for Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மூர்த்தி ( உதவி ஆய்வாளர் ஓய்வு) |
| Father name | : | கோவிந்தசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | PW8 (LW10 ) |
| Religion | : | |
| Age | : | 64 |

**1** வது எதிரி ஆஜர்**,** **2** வது எதிரி காவலில் ஆஜர்**.** அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர்**. 1, 2** எதிரி கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**.**

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 09th day of March 2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று பழஞ்சநல்லூரில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 13.03.2018ம் தேதி காலை 6.30 மணியளவில் சோழத்தரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த மரிய ஜோசப் ஆரோக்கியதாஸ் என்பவரிடம் ராபர்ட் வின்சென்ட என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று சோழத்தரம் காவல் நிலைய குற்ற எண். 56/2018 என்ற எண்ணில் இ.த.ச.பிரிவுகள் 457, 380-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அவர் இவ்வழக்கினை

விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தும், இவ்வழக்கில் தொடர்புடைய 1வது எதிரியை சாட்சிகள் முன்னிலையில் விசாரித்து கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அவரால் அடையாளம் காட்டப்பட்ட வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதல் மூலம் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்து அவர் பணி ஓய்வின் காரணமாக சென்றுவிட்டதால் அவருக்கு பிறகு சோழத்தரம் காவல் நிலையத்திற்கு உதவி ஆய்வாளராக பணி பொறுப்பு ஏற்றுக் கொண்ட நான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கின் கோப்புகளை பார்வையிட்டு பரிசீலனை செய்த வகையில் இவ்வழக்கில் மற்றொரு எதிரி சம்பந்தப்பட்டு இருப்பதாக தெரிய வந்ததால் அவரை நான் தேடிவந்த நிலையில் சேத்தியாத்தோப்பு காவல்நிலைய குற்ற எண். 413/2005 சட்டப்பிரிவுகள் 307 இ.த.ச. மற்றும் பிரிவு 3 சொத்து அழிப்பு மற்றும் சேதப்படுத்துதல் தடைச் சட்டம் என்ற வழக்கில் கடலூர் மத்திய சிறையில் நீதிமன்ற காவலில் இருந்த 2வது எதிரியான செல்வமணி த/பெ. ராமலிங்கம் என்பரை உரிய நடைமுறைக்கு படி சம்பிரதாய கைது செய்து இவ்வழக்கில் உட்படுத்தினேன். மேலும் ஏற்கெனவே உதவி ஆய்வாளரால் விசாரிக்கப்பட்ட சாட்சிகளை நான் விசாரித்தபோது அவரிடம் சொன்னதையே என்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. எனது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 457, 380 இ.த.ச.படி குற்றயறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் உதவி ஆய்வாளர் ஓய்வு பெற்ற பின்பு அந்த காவல்நிலையத்திற்கு வந்தேனா என்றால் அவர் இருந்தபோதே அதே காவல்நிலையத்தில் பணிபுரிந்தேன். அந்த சமயத்திலேயே வழக்கு சம்பவம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். சம்பவயிடத்திற்கு சென்று விசாரித்தபோது நான் உடன் சென்றேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பவம் தொடர்பு சம்பந்தமாக எதிரியை கைது செய்து வழக்கு

சொத்துக்கள் கைப்பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்தவொரு ஆவணத்திலும் மற்றொரு நபர் சம்பந்தப்பட்டிருப்பதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முந்தைய விசாரணை அதிகாரி ஓய்வு பெற்று எத்தனை நாட்களுக்கு பின்பு வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன் என்றால் 12.11.2018 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். நான் விசாரணைக்கு பின்பு 10 நாட்கள் தாமதமாக புகார் அளிக்கப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பின்பு நான் சம்பவயிடத்தை சென்ற பார்த்தேனா என்றால் இல்லை.

முந்தைய விசாரணையின் அடிப்படையில் நான் விசாரணையை தொடர்ந்தேன் என்றால் சரிதான். புகாரில் குற்றம் சாட்டப்பட்டவர் பெயர் இல்லை என்றால் சரிதான். 2 வது எதிரியை எதன் அடிப்படையில் நான் விசாரித்தேன் என்றால் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரித்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் மற்றொரு நபர் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு முன்பு 2 வது எதிரி தொடர்பாக யாரும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் எதிரியை தனிப்பட்ட முறையில் கைது செய்யவில்லை என்றாலும் வேறு வழக்கில் சிறையில் இருந்தவரை தான் சம்பிரதாய கைது செய்தேன் என்றாலும் சரிதான். அவரிடமிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் எனது மறுவிசாரணையின் போது சாட்சிகள் யாரையும் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரிகள் மீது சோழத்தரம் காவல்நிலையத்தில் வேறு வழக்குகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எதிரிகளை பார்த்ததாக யாரும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 2 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றாலும் அவர் வேறொரு வழக்கில் சிறையில் இருந்ததால் அவரை இந்த வழக்கில் தவறாக சேர்த்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறு விசாரணை இல்லை.

**Form.No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

Calender
Miscellaneous CC.No. 38 of 2019
Priliminary Register
Sessions

Prosectuion PW 7
Depostitions of Prosecution witness for Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | திரு. மரிய ஜோசப் ஆரோக்கியதாஸ் ( உதவி ஆய்வாளர்) |
| Father name | : | செங்கோல் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | PW7 (LW9 ) |
| Religion | : | |
| Age | : | 66 |

**1** வது எதிரி ஆஜர், **2** வது எதிரி காவலில் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர். **1, 2** எதிரி கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act
(Central Act 44 of 1969) on the 09th day of March 2026

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று கடலூரில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 13.03.2018ம் தேதி காலை 6.30 மணியளவில் சோழத்தரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது ராபர்ட் வின்சென்ட என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று சோழத்தரம் காவல் நிலைய குற்ற எண். 56/2018 என்ற எண்ணில் இ.த.ச.பிரிவுகள் 457, 380-ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7/அ.சா.7** ஆக

குறியீடு செய்யப்படுகிறது. பின்பு நான் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 13.03.2018ம் தேதி காலை 7.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று அங்கிருந்த சாட்சிகளான செபஸ்தியன் மற்றும் ரகுமூர்த்தி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். சம்பவ இடத்தின் பார்வை மகசர் **அ.சா.ஆ.8/அ.சா.7** மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.9/அ.சா.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் ராபர்ட் வின்செண்ட், கிரிஜாமேரி, தாஸ், ஆரோக்கியமேரி மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான செபஸ்தியன் மற்றும் ரகுமூர்த்தி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். சம்பவம் உண்மையென எனது விசாரணையில் தெரிய வந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளை தேடி வந்த நிலையில் 14.03.2018ந் தேதி மதியம் 1.00 மணியளவில் மாமங்கலம் பஸ் ஸ்டாப் அருகே இவ்வழக்கின் 1வது எதிரியான சேகர் என்கிற கட்டை சேகர் என்பவரை சாட்சிகள் அந்தோணிசாமி, ஆரோக்கியதாஸ் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கினேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.10/அ.சா.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் 14.03.2018ந் தேதி மதியம் 2.15 மணியளவில் இவ்வழக்கின் 1வது எதிரி அடையாளம் காட்டி ஆஜர் செய்த ஷார்ப் கலர் டி.வி. 21 இன்ஞ்ச் – 1, சோனி டி.வி.டி பிளேயர் –1, கேட் வே லாப்டாப் – 1, நேஷனர் மேட் இன் ஜப்பான் அயர்ன் பாக்ஸ் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினேன். அதற்கான கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.11/அ.சா.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கு சொத்துக்களை படிவம் எண்.91 மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைத்து அதற்கு வழக்கு சொத்து எண். 25/2018 என பெற்றேன். அதற்கான படிவம் எண்.91 **அ.சா.ஆ.12/அ.சா.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2 புகைப்படங்கள் கோர்வையில் காணப்படும் பொருட்கள் தான் என்னால் ஒப்படைக்கப்பட்ட வழக்கு சொத்துக்கள் ஆகும். பின்பு சாட்சிகள் அந்தோணிசாமி, ஆரோக்கியதாஸ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இத்துடன் நான் பணி

ஓய்வில் சென்றதால் வழக்கு கோப்பினை நிலையத்தில் ஒப்படைத்தேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிகள் இருவரையும் எனக்கு தெரியுமா என்றால் அதில் ஒருவரை மட்டும் தான் எனக்கு தெரியும். 10 நாட்களுக்கு பின்பு தான் புகார் பெறப்பட்டது என்றால் சரிதான். புகாரின் அடிப்படையில் தான் அதில் குறிப்பிட்ட தேதியில் சம்பவம் நடந்ததாக தெரியும் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 4 கி.மீ ஆகும். சம்பவம் நடந்த இடத்தில் இருந்து பஜாருக்கு வரவேண்டும் என்றால் சோழத்தரம் வழியாக வரவேண்டும் என்றால் சரிதான். புகார் பெற்றவுடன் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் என்று விசாரணையை தொடங்கினேன் என்றால் 13.03.2018 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணையை தொடங்கினேன். அதுவரை குற்றவாளி யார் என்பதை கண்டுடபிடிக்கவில்லை என்றால் சரிதான். 14.03.2018 ந் தேதி மாமங்கலம் செக் போஸ்டில் வைத்து சந்தேகத்தின் அடிப்படையில் எதிரியை விசாரித்தபோது அவரிடம் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. அவரது கையில் சாக்கு பையுடன் வழக்கு சொத்துக்கள் இருந்தது. அப்போது எதிரிகள் ஒருவர் மட்டும் தான் அங்கு இருந்தார்.

நான் கூறும் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் ஒரே சாக்குபையில் தான் இருந்ததா என்றால் ஒரே சாக்குபையில் தான் இருந்தது. அதன் பின்பு நான் அவரை எப்போது கைது செய்தேன் என்றால் அப்போதே 12.45 மணிக்கு கைது செய்துவிட்டேன்.பொருட்கள் கிடைத்தது பற்றி புகார் அளித்த நபருக்கு தெரிவித்தேனா என்றால் எதிரியை கைது செய்த பின்பு சம்பவம் நடந்த இடத்தை எதிரி அழைத்து சென்ற காண்பித்தார். அந்த சமயத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீட்டில் யார் இருந்தது என்றால் புகார் அளித்த வாத்தியார் இருந்தார். அவரது மனைவி இருந்தார். அக்கம்பக்கத்தினர் இருந்தனர். சாட்சிகள் முன்னிலையில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை பார்வையிட்டதாக வழக்கு கோப்புகளில் -குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது வேறு வழக்குகள் எதுவும் உள்ளதா என்றால் எங்களது

காவல்நிலையத்தில் இல்லை.

புகார் அளிப்பதில் தாமதம் தொடர்பாக புகார் அளித்த நபர் காரணம் தெரிவித்தாரா என்றால் தான் ஸ்ரீமுஷ்ணம் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிவதாகவும் தனக்கு பள்ளியில் பரிட்சை இருந்ததாலும் அதனை முடித்து விட்டு வந்து புகார் அளித்ததாக தெரிவித்தார். அவரது புகாரிலும் அதனை குறிப்பிட்டுள்ளார். புகார்தாரரின் மனைவி படித்துள்ளாரா என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரரின் மனைவியும் மாமியாரும் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் விசாரிக்க சென்றபோது அங்கு வீடுகள் அருகருகே இருந்ததா என்றால் சற்று தள்ளி தான் வீடுகள் இருந்தது. அந்த இடம் சோழத்தரம் ஸ்ரீமுஷ்ணம் வழி பிரதான சாலை என்றால் சரியல்ல. அந்த ஊரில் அந்த சமயத்தில் திருவிழா நடந்ததா என்றால் இல்லை அவர்கள் கோயிலுக்கு தான் சென்றனர். புகாரில் குற்றம் செய்த நபரின் பெயர் எதுவும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் மற்றொரு எதிரியை நான் எப்போது கைது செய்தேன் என்றால் அவரை நான் கைது செய்யவில்லை.

புகார்தாரரின் மனைவியை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். வீட்டில் வைத்து விசாரித்தேன். அவரை நான் அலைபேசியில் விசாரித்ததாக அவர் தெரிவித்தால் அது சரியல்ல. புகார்தாரரின் மாமியாரான ஆரோக்கியமேரி என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அந்தோணிசாமி என்பவரிடம் நான் வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றதாக அவர் தெரிவித்தார் அது சரியல்ல. அதில் உள்ள விபரங்கள் எதையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த திருட்டுக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றாலும் எதிரிகள் மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. புகைப்படங்களை லொக்கேஷன் மற்றும் நேரம் ஆகியவை காட்டும் விதமாக எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை முடிந்தது. மறுவிசாரணை இல்லை.